**இராம கோபாலன்**
*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

25-3-2010

**கற்பு நிலை பற்றிய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் கருத்து அதிர்ச்சி அளிக்கிறது**
**இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அறிக்கை!**

நடிகை குஷ்பு பத்திரிகையில் தந்த பேட்டியால் தமிழகத்தில் பெரும் சர்ச்சை கிளம்பி பலர் வழக்குகள் தொடுத்தனர். தமிழக அரசியல்கட்சிகள் சிலவும் எதிர்ப்பு தெரிவித்தன.

தனது வழக்கை ரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு செய்தது தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து உச்ச நீதிமன்றத்தில் குஷ்பு முறையீடு செய்தார். அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன், நீதிபதி தீபக் வர்மா மற்றும் நீதிபதி சவுகான் ஆகியோர் கீழ்க்கண்டவாறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர்..

''திருமணத்திற்கு முன் செக்ஸ் உறவு வைத்துக்கொள்வதோ அல்லது திருமணம் செய்து கொள்ளாமல் ஆணும், பெண்ணும் விரும்பும் பட்சத்தில் இணைந்து வசிப்பதோ எந்தவிதத்திலும் தவறு இல்லை''

நடிகையின் கருத்து தனிப்பட்ட கருத்தாக இருக்க முடியும்! ஆனால் நீதிபதிகளின் கருத்து சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கும் என்பதை ஏன் அவர்கள் கருதவில்லை?! நீதிபதியும் நடிகையும் ஒன்றாகிவிட முடியுமா?

கற்பு நெறி என்பது பாரதத்தின் கலாச்சார, பண்பாட்டின் பாரம்பரியம். அதிலும் திருக்குறள் முதலான அனைத்து தமிழ் இலக்கியங்களும் தலையாய அறமாக வலியுறுத்தி வழிகாட்டுகின்ற சிறப்புமிக்கது.

பண்பாடு இல்லை என்றால் பாரதம் இல்லை! வெறும் சட்டத்தின் எழுத்துகளைப் பார்த்து பதில் சொல்லுபவர்களாக நீதிபதிகள் இருக்கலாமா? சமுதாயத்தின் நம்பிக்கை, அதன் சிறப்பு போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு இவர்கள் கருத்துகூற வேண்டாமா?

வெள்ளைக்காரர்கள் நாட்டைவிட்டுப் போனாலும் நமது மூளையில் அவர்களது எச்சம் மிச்சம் இருப்பதைத்தான் இத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இதற்கிடையில் ராதையையும் ஸ்ரீ கிருஷ்ணரையும் வம்புக்கு இழுப்பது தேவையற்றது! அதன் அடிப்படை தத்துவம் வேறு! புராண விஷயங்களை நீதிபதியின் முன் (வேறு வழக்குகளில்) கொண்டு வந்தால் நீதிபதிகளின் பார்வை என்னவாக இருக்கும் என்பதற்குப் பல உதாராணங்கள் இருக்கின்றன!

உலகமே பண்பாட்டிற்குப் பாரதம் என்று போற்றி ஒவ்வொரு நாடும் அதனைப் பின்பற்ற நமது கலாச்சாரத்தைப் பற்றி பெருமிதத்தோடு குறிப்பிடும்போது நீதிபதிகளின் கருத்து துரதிருஷ்டமானது!

திருக்குறள் காட்டும் கற்புநெறி, கற்புக்கரசி கண்ணகி போன்ற தமிழ்நாட்டோடு பின்னிப்பிணைந்த விஷயங்களைத் தூக்கியெறிவார்களா?

குஷ்பு கருத்து தெரிவித்தபோது கொந்தளித்த அரசியல்வாதிகளும், தமிழ் ஆர்வலர்களும் என்ன கருத்து தெரிவிக்கப் போகிறார்கள்?

பள்ளி, கல்லூரி மாணவிகள் குழந்தைகளோடு வரும் அவலம் அரங்கேறும்! எய்ட்ஸ் நோய்க்குப் பிரச்சாரத்தால் மருந்து தேடும் அவலம் நீடிக்கும்! பண்பாட்டால், நாகரீகத்தால் மிக உயர்ந்த லட்சிய வாழ்க்கையை மனிதன் வாழ்வதை அறிவுறுத்துவதற்குப் பதிலாக 'எப்படி வேண்டுமானாலும் வாழலாம்' என்ற கருத்தால் மிருகங்களைவிடத் தாழ்ந்து போகும் வாழ்க்கை அமைந்துவிடும் அபாயம் உருவாகிவிடும்!

நீதிபதிகளின் கருத்து தேவையற்றது! வேதனை அளிக்கக்கூடியது! இதனை வாபஸ் பெற வேண்டும் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது!

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**
நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**